இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 111 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 15 – சனிக்கிழமை 30 நவம்பர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 111: Thiruvalluvar Year - 2055 - Karthigai 15 - Saturday 30 November 2024 - Madurai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக்கூடாது!

# மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனே ரத்து செய்க!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் !

**சென்னை, நவ.30-**

**மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக இரத்து செய்திடவும், சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக இரத்து செய்திடவும், சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்க உரிம ஏலங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (28.11.2024) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள அக்கடிதத்தில், மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசு உரிமம் வழங்கியதால், அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்டமான நிலைமையை குறிப்பிட்டு, பிரதமர் அவர்கள் உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு ஒன்றிய அரசு வழங்கியுள்ள உரிமத்தினை இரத்து செய்திட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பாதிப்புகள்

மேலும், இதுபோன்ற முக்கியமான கனிமங்களின் சுரங்க உரிமங்களை ஒன்றிய அரசு ஏலம் விடுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த தமிழ்நாடு அரசின் கவலைகளை, நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் 3.10.2023ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலமாக ஏற்கெனவே ஒன்றிய அரசுக்குத் தெரிவித்திருந்த நிலையில், துரதிர்ஷ்டவசமாக, ஒன்றிய நாடாளுமன்ற விவகாரங்கள், நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் அவர்கள், தனது 2.11.2023 நாளிட்ட கடிதத்தில், நாட்டின் நலன்களுக்காக, சுரங்க அமைச்சகத்தின் முக்கியமான கனிமங்களை ஏலம் விடுவதைத் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டு, தமிழ்நாடு அரசின் கோரிக்கையை நிராகரித்திருந்தார் என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்குச் சேதம்!

இதற்கிடையில், கடந்த 7.11.2024 அன்று, நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் தொகுதியில் சுரங்கம் அமைப்பதற்கு இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தை தகுதியான நிறுவனமாக ஒன்றிய சுரங்கத் துறை தேர்வு செய்து அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மேற்படி டங்ஸ்டன் தொகுதியில் கவட்டையம்பட்டி, எட்டிமங்கலம், ஏ.வல்லாளபட்டி, அரிட்டாபட்டி, கிடாரிப்பட்டி மற்றும் நரசிங்கம்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளதாகவும், அவற்றில், அரிட்டாபட்டி ஒரு பல்லுயிர்ப் பெருக்க வரலாற்றுத் தலம் என்றும், இது குடைவரைக் கோயில்கள், சிற்பங்கள், சமணச் சின்னங்கள், தமிழ் பிராமி எழுத்துக்கள் மற்றும் பஞ்சபாண்டவர் கல் படுக்கைகள் உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்குப் பிரபலமானது என்றும் குறிப்பிட்டு, இந்தப் பகுதியில் எந்தவொரு சுரங்க நடவடிக்கை மேற்கொண்டாலும், அது ஈடுசெய்ய முடியாத அளவிற்கு சேதங்களை ஏற்படுத்தும் என கவலைபடத் தெரிவித்துள்ளார்.

### மக்களை வெகுவாக பாதிக்கும்

மேலும், மக்கள் தொகை அதிகம் உள்ள கிராமங்களில், வணிக ரீதியாக இதுபோன்று சுரங்கம் தோண்டுவது கண்டிப்பாக இக்கிராமங்களில் உள்ள மக்களை வெகுவாக பாதிக்கும் என்றும், இதனால் தங்களது வாழ்வாதாரம் பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில் உள்ள அப்பகுதி மக்களுக்கு ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், எனவே, இந்தப் பகுதிகளில் இதுபோன்ற சுரங்கத் தொழிலை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதிக்காது என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை உடனடியாக இரத்து செய்ய ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், சம்பந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியின்றி சுரங்கம் தோண்டுவதற்கான ஏலங்களை மேற்கொள்ளக் கூடாது என்றும் சுரங்க அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## வேளாண்மை - உழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி - செய்தித்துறை

# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் உள்ளிட்ட துறைகளின் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**சென்னை, நவ.30-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் 2021-22 முதல் 2024 25ஆம் ஆண்டுகள் வரை வேளாண்மை - உழவர் நலத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை அறிவிப்புகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்தும், ஆணை வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் விவரங்கள், நடைபெற்று வரும் பணிகள் ஆகியவற்றை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை தொடர்ந்து பெருக்குதல், விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான துறை சார்ந்த திட்டங்களை சிறப்பாகவும், தரமாகவும் வழங்கிட முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், **வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில்** நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் நெய்தல் பாரம்பரிய பூங்கா அமைக்கும் பணிகள், ஈரோடு மாவட்டத்தில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் ஏற்றுமதி மையம் தரம் உயர்த்தும் பணிகள், தருமபுரி மாவட்டத்தில் மா மகத்துவ மையமும், திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்லி மகத்துவ மையமும் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் பணிகள், தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் 65 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள், போன்ற பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில்** இந்த அரசு பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ்போற்றி வருகிறது. மேலும், தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகளை வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் பணிகள், தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கும் பணிகள், தண்டையார்பேட்டை - காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சகப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளை இடித்துவிட்டு 34.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### அதானி முறைகேடு, மணிப்பூர் வன்முறை: எதிர்க்கட்சிகள் 4வது நாளாக வலியுறுத்தல்

## விவாதம் நடத்த மக்களவை சபாநாயகர் மறுப்பு!

### நாடாளுமன்ற இரு அவைகளும் திங்கட்கிழமை வரை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, நவ. 30–

அதானி ஊழல், மணிப்பூர் வன்முறை குறித்து விவாதம் நடத்த வேண்டும் என நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தலையடுத்து தொடர்ந்து நான்காவது நாளாக நாடாளுமன்ற அலுவல்கள் முடங்கின.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை தொடங்கிய நிலையில், முதல் நாளிலேயே அதானி லஞ்ச விவகாரம், மணிப்பூர் வன்முறை விவகாரம் குறித்து உடனடி விவாதம் கோரி எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டன. இதையடுத்து, இரு அவைகளின் அலுவல்களும் கடந்த 3 நாட்களாக முடங்கின.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் நேற்றும் நோட்டீஸ் வழங்கப்பட்டது. அதன்படி, நான்காவது நாளான நேற்று காலை 11 மணிக்கு மக்களவை கூடியதும், அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்தக் கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அவையின் மைய பகுதிக்குச் சென்று வலியுறுத்தினர். இதனால் மக்களவை பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியதும் அதானி முறைகேடு குறித்து விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இதேபோன்று, மாநிலங்களவை காலை 11 மணிக்கு கூடியதும் அதானி ஊழல், மணிப்பூர் வன்முறை தொடர்பாக விவாதிக்கக்கோரி அளிக்கப்பட்ட 16 நோட்டீஸ்களும் நிராகரிக்கப்படுவதாக மாநிலங்களவை தலைவர் தெரிவித்தார். இதையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதியை முற்றுகையிட்டு முழக்கமிட்டனர். எதிர்க்கட்சிகளின் முழக்கம் நீடித்ததால் மாநிலங்களவை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.